**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 19 / 2023**

**வா.சா.1 – லோகநாதன்** **22.01.2025**

**குறுக்கு விசாரணை :–**

நான் மடாதிபதி கிடையாது. நான் வாதி மடத்தின் நிர்வாகி ஆவேன். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்ட பொன்னம்பலம் சுவாமிகள் எழுதி வைத்த உயில் தான் ஆதாரம். பொன்னம்பலம் சவாமிகள் ரெங்கநாசிவாமி எழுதி வைத்த உயிலின் படி மடாதிபதியாக இருந்தார். பொன்னம்பல சுவாமிகள் மே 2006ல் இறந்துபோனார் தேதி எனக்கு தெரியாது. பொன்னம்பலசுவாமிகள் மானாமதுரை அண்ணாசிலை அருகில் உள்ள மடத்தில் வைத்து இறந்துபோனார். பொன்னம்பல சுவாமிகள் எழுதி வைத்த உயிலில் கண்ட 1வது நபரான முருகானந்த சுவாமிகள் திருப்பரங்குன்றத்தில் இருந்து வந்தார். தற்போது அவர் உயிருடன் இல்லை. மேற்படி முருகானந்த சுவாமிகள் ஏப்ரல் 2021ல் இறந்து போனார். மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். முருகானந்த சுவாமிகள் பொன்னம்பல சுவாமியின் சீடர் என்றால் சரிதான். பொன்னம்பல சுவாமிகள் இறந்த பின்பு முருகானந்த சுவாமிகள் மடாதிபதியாக இருந்தார். முருகானந்த சுவாமிகள் இறப்பதற்கு முன்பு அவருக்கு பின் மடாதிபதியாகயும் நிர்வாகியாகவும் யாரை நியமித்தார் என்றால் அது எனக்கு தெரியாது. பொதுவாக மடாதிபதிகள் உயிருடன் இருக்கும் போதே அவருக்கு பின்பு யார் மடாதியதியாக வேண்டும் என்று முடிவு செய்து நியமித்து வைப்பது வழக்கம் என்றால் சரிதான். தமிழகத்தில் உள்ள அனைத்து மடங்களிலும் மேற்சொன்ன நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் வாதி மடத்தின் நிர்வாகியாக என்னை நியமனம் செய்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவத்தின் பக்கம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.1 உயில் பொன்னம்பல சுவாமிகள் இறந்த பின்னர் தான் நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான். பொன்னம்பல சுவாமிகள் உயிருடன் இருந்த காலத்தில் வாடகைக்கு குத்தகைக்கு விட்ட மடத்தின் சொத்துகளை வா.சா.ஆ.1 உயில் கட்டப்படுத்தாது என்றால் சரியல்ல. பொன்னம்பல சுவாமிகள் உயிருடன் இருந்த பொழுது செய்த செயல்கள் குறித்து எனக்கு எந்தவித உரிமையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பொன்னம்பல சுவாமிகள் உயிருடன் இருந்த காலத்தில் மடத்தின் சொத்துக்களை மடாதிபதி என்ற முறையில் குத்தகைக்கு வாடகைக்கு விட அவருக்கு மட்டும் தான் உரிமை இருந்தது என்றால் சரிய்லல. நான் சன்னியாசி வாழ்க்கை வாழவில்லை இல்லற வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். பொன்னம்பல சவாமிகள் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை பொறுத்து முருகானந்த சுவாமிக்கு மட்டும் தான் முழு உரிமையும் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் முருகானந்த சுவாமிக்கு உதவியாக சொல்லும் வேலையை செய்யும் பணியாளராக மட்டும் இருந்துவந்தேன் என்றால் சரியல்ல. பொன்னம்பல சுவாமிகள் இறந்த பிறகு முருகானந்த சுவாமிகள் மடத்திற்கு மடாதிபதியாக வந்த பின்பு அவர் என்னை மடத்திற்கு எதற்கும் அழைத்ததில்லை என்றும் அவர் மட்டும் தான் தனியாக நிர்வாகத்தை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. நான் கூட்டுறவு துறையில் பணிபுரிந்து 30.04.2018ல் ஓய்வு பெற்றேன். முருகானந்த சுவாமிகள் மடாதிபதியாக வந்த பின்பு நான் பணிஓய்வு பெற்ற தேதியான 30.01.2018 தேதி வரை மடத்தின் எந்த விசயங்களிலும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. முருகானந்த சுவாமிகளின் இறப்புசான்றை நான் தாக்கல் செய்யவில்லை. முருகானந்த சுவாமி இறந்த தேதி மற்றும் அவர் யாரை மடாதியதியாக நியமித்தார் என்று எனது பிராதில் சொல்லவில்லை என்றால் இறந்த தேதி மட்டும் சொல்லியுள்ளேன். பொன்னம்பல சுவாமிகள் இறந்த பின்பு முருகானந்த சுவாமிகள் மட்டும் தான் தனித்து மடத்தை நிர்வாகம் செய்து வந்தார்

என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் ஜி.ஆர்.நம்பர் 332 ஆகும். தாவா சொத்தில் 1000 சதுரடி கட்டுமானம் உள்ளது. மீதி உள்ள இடம் காலியாக உள்ளது. சொத்து விபரத்தில் காலியிடம் மற்றும் கட்டுமானத்தை சேர்த்து தான் சொல்லியுள்ளேன். சொத்து விபரத்தில் எவ்வளவு கட்டுமானம் எவ்வளவு காலியிடம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1000 சதுரடி கட்டுமானம் உள்ளது. மீதி உள்ள இடம் காலியாக உள்ளது. தாவா சொத்தின் நான்குமால் விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் கிழக்கே பார்த்திபனூர் ரஸ்தா மெயின்ரோடு உள்ளது. தெற்கே கத்தோலிக்கன் சர்ச் உள்ளது. மேற்கே 5ம் லக்க சொத்து உள்ளது. வடக்கில் நாராயணசாமி மடத்தின் சொத்து உள்ளது. நான் சொன்ன நான்குமால் தவறானது எனக்கு தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கதவு எண் மின் இணைப்பு எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாவா சொத்து விபரத்தில் மின் இணைப்பு எண் சொல்லவில்லை என்றால் சதிதான். தாவா சொத்திற்கான சொத்து வரி மின் கட்டணம் தண்ணீர் கட்டனம் ஆகியவை பிரதிவாதி செலுத்திவருகிறார் என்றால் சொத்துவரி மட்டும் நான் செலுத்தி வருகிறேன். நான் வா.சா.ஆ.6 மற்றும் 7 சொத்து வரி ரசீதுகளுக்கு முன்பு உள்ள காலத்திற்குரிய சொத்து வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் 7 சொத்து வரி ரசீதுகள் முருகானந்த சுவாமிகள் மற்றும் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். 01.11.2001ம் தேதி முதல் பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் அவரது சகோதர் சங்கரநாராயணன் ஆகியோர் தாவா சொத்தை பொன்னம்பல சுவாமிகளிடம் இருந்து வாடகைக்கு பெற்று கூட்டாக தொழில் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 07.04.2009 அன்று முருகானந்த சுவாமிகள் மற்றும் இந்த பிரதிவாதிகளுக்கிடையே குத்தகை பத்திரம் ஏற்பட்டு இந்த பிரதிவாதியிடமிருந்து குத்தகை தொகையாக ரூபாய் ஒரு லட்சம் ரொக்கமாகவும்

ரூபாய் எட்டு இலட்சம் காசோலையாகவும் முருகானந்த சுவாமிகள் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டு 99 வருட குத்தகை பத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி குத்தகை ஏற்பட்ட போது நானும் உடனிருந்தேன் என்றும் தற்பொழுது இந்த வழக்கிற்காக அதுபற்றி எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி குத்தகை பத்திரத்தின் நகல் என்னிடம் இல்லை. மேற்படி குத்தகை பற்றிய விபரம் எனக்கு 2023ம் ஆண்டு தெரியும். வா.சா.ஆ.3 அறிவிப்பு ஆவணம் 03.08.2021ல் அனுப்பப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 பதில் அறிவிப்பு 14.08.2021 தேதியிட்டது. மேற்படி இரண்டு அறிவிப்புகளும் எனக்கு தெரியும். நான் வா.சா.ஆ.5 பதில்அறிவிப்பு மூலமாக குத்தகை பற்றிய விபரத்தை தெரிந்து கொண்டு 2023ம் ஆண்டு தான் தெரியவந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குத்தகை பற்றி தெரிந்துகொண்ட பின்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து குத்தகை பத்திரத்தை பார்த்துள்ளேன். அந்த குத்தகை பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த குத்தகை பத்திரத்தில் குருபூஜை அன்று ஐந்து சாதுக்களுக்கு ரூபாய் மூன்றுஆயிரம் வீதம் பிரதிவாதி முருகானந்தம் சுவாமிகளிடம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி முருகானந்தம் சுவாமிகள் உயிருடன் இருந்த காலம் வரை பிரதிவாதி குருபூஜை அன்று 5 சாதுக்களுக்கு ரூபாய் மூன்று ஆயிரம் வீதம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு நிர்வாக பொறுப்பு இல்லை என்பதால் தான் குத்தகை ஆவணத்தில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குத்தகை ஆவணத்தில் குத்தகை காலம் முடிந்த பின்பு பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள கட்டுமானங்களை அப்புறப்படுத்தி காலியிடமாக ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதன்மூலம் என்ன தெரிகிறது என்றால் உயில் மூலம்

எனக்கு நிர்வாக பொறுப்பு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பதில்அறிவிப்பை பார்த்த பின்பு பிரதிவாதி முருகானந்தம் சுவாமிக்கு வழங்கிய காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு பணமாக்கப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. முருகானந்தம் சுவாமி மடாதிபதியாக இருந்த காலத்தில் எத்தனை வங்கிகளில் வங்கி கணக்கு இருந்தது என்று தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முருகானந்தம் சுவாமிகள் உயிருடன் இருந்த காலத்தில் நிர்வாகத்தில் பங்குபெறாததால் தான் வங்கி கணக்குகள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. முருகானந்தம் சுவாமிகள் உயிருடன் இருந்த காலத்தில் நான் நிர்வாகத்தில் பங்குபெற்றதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் வழக்குகளில் நான் ஆஜராகியுள்ளேன். வரவு செலவு நிர்வாகம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. இதுவரை நான் குத்தகை சம்மந்தமான காசோலை மடாலய கணக்கில் வந்துள்ளதா என்று சரிபார்த்தேனா என்றால் மடாலய கணக்கில் அது இல்லை. முருகானந்தம் சுவாமிகளின் கணக்கை நான் பார்க்கவில்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக பொய்யாக நிர்வாகி என்று கூறி வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**